**கம்பொல நகர சபை**

**கண்டி மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 மார்ச் 03 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2015 மார்ச் 30 ஆம் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 யூன் 20 ஆந் திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியான அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து கம்பொல நகர சபையின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

2004 ஆம் ஆண்டிற்காக நிலவிய ரூபா 106,268 தொகையான நிலுவையான பொது மலசல கூடக் கட்டணத்தை அறவிடுவதற்காக தொடரப்பட்டிருந்த வழக்கில் வாதி விடுதலையான போதிலும், அத் தொகை மேலும் கடன்பட்டோராக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

#### 1.3.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

ஊழியர் கடன் கணக்கு மீதி ரூபா 17,123,189 ஆகக் காணப்பட்டதுடன் ஊழியர் கடன் பதிவேட்டின் படி, இது ரூபா 14,548,103 ஆகக் காணப்பட்டமையால் ரூபா 2,575,086 தொகையான இணக்கமின்மை காணப்பட்டது.

#### 1.3.3 பெறவேண்டிய கணக்குகள்

2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறவேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 13,807,044 தொகையானதுடன் அதில் 01 வருடத்திற்கு மேற்பட்ட மீதிகளின் பெறுமதி ரூபா 10,737,280 ஆகக் காணப்பட்டது.

#### 1.3.4 செலுத்தப்பட வேண்டிய கணக்குகள்

2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலுத்தப்பட வேண்டிய 4 கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 12,296,424 தொகையானதுடன் அதில் 01 வருடத்திற்கு மேற்பட்ட மீதிகளின் பெறுமதி ரூபா 11,117,729 ஆகக் காணப்பட்டது.

**1.3.5 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை**

05 ஆண்டுகளுக்கு அதிகமான காலமாக பெறவேண்டிய கணக்காக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்ட இலங்கை மின்சாரசபையிடம் இருந்து பெறவேண்டிய ரூபா 44,682,119 தொகையான மீதி சபைக்கு உண்மையாகக் கிடைக்கும் என்பதற்கு எவ்வித உறுதிப்பாடும் கணக்காய்விற்குக் கிடைக்கப்பெறவில்லை.

**1.3.6 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணக்கமின்மைகள்**

பின்வரும் இணக்கமின்மைகள் அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் |
|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயகக் குடியரசின் நிதிப் பிரமாணம் 571 | 163 சந்தர்ப்பங்களில் வைப்புச் செய்யப்பட்டிருந்த 02 வருடங்களிற்கு மேற்பட்ட ரூபா 1,781,000 தொகை பெறுமதியான வைப்புக்கள் தேறப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | உள்ளூராட்சி ஆணையாளரின் 1980 திசெம்பர் 31 ஆம் திகதிய 1980/46 ஆம் இலக்க சுற்றறிக்கை | சபைக்குரிய கடைகளுக்காக 05 ஆண்டுகளுக்கு ஒரு தடவை வாடகை மதிப்பிடப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | இலங்கைக் குடியரசின் தாபன விதிக் கோவை XXIV ஆம் அத்தியாயத்தின் 4 ஆம் பிரிவு | ஓய்வுபெற்ற.׃. மரணித்த அல்லது சேவையை முடிவுறுத்திய 04 உத்தியோகத்தர்களிடம் இருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 109,594 தொகையான ஊழியர் கடன் அறவிடப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | 2009 யூன் 17 ஆம் திகதிய 9/2009 (1) ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கை | 2015 பெப்ரவரி 13 ஆம் திகதி சபையின் கடமைகளைப் பொறுப்பேற்ற தற்பொதைய செயலாளர் சபையில் உள்ள கைவிரலடையாள இயந்திரத்தின் மூலம் 2015 திசெம்பர் இறுதி வரை வருகை மற்றும் வெளிச்செல்லலை உறுதிப்படுத்தி இருக்கவில்லை. |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 50,951,836 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 34,563,421 ஆக இருந்தமையால் நிதி விளைவுகளில் ரூபா 16,388,415 தொகையான அதிகரிப்பைக் காணக்கூடியதாக இருந்தது.

## 2.2 பகுப்பாய்வு செய்யப்பட்ட நிதி மீளாய்வு

(அ) நிதி விளைவின் ரூபா 16,388,415 தொகையான அதிகரிப்பிற்கு 05 வருமான விடயங்களில் 4.8 சதவீதம் முதல் 200 சதவீதம் வரையான அதிகரிப்பும் 04 செலவின விடயங்களில் 8 சதவீதம் முதல் 80 சதவீதம் வரையான குறைவும் முக்கியமாகத் தாக்கமளித்திருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் போது சம்பள மீளளிப்பாக ரூபா 78,879,358 தொகை கிடைக்கப்பெற்றிருந்த போதிலும் சம்பளம் மற்றும் படிப்பணமாக ரூபா 98,420,731 தொகை செலுத்தப்பட்டிருந்தது. இதன் படி, சபை வருமானத்தில் ரூபா 19,541,373 தொகை சபை ஊழியர்களுக்காக சம்பளம் செலுத்தப்படுவதற்காகச் செலவிடப்படுவது அவதானிக்கப்பட்டதுடன் அத் தொகை சபை சுய ஆக்க வருமானத்தின் 23 சதவீதத்தைக் கொண்டிருந்தது.

## 2.3 வருமான நிருவாகம்

### 2.3.1 வருமானச் சேகரிப்பின் செயலாற்றல்

செயலாளரால் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| வருமான விடயம் | 2015.01.01 உள்ளவாறான நிலுவை | ஆண்டிற்கு உரிள உரித்தானைவ | சேகரிக்கப்பட்ட வருமானம் 2015.12.31 இல் உள்ளவாறு நிலுவையாகச் சேகரிக்கப்பட்ட வருமானம் | 2015 ஆம் ஆண்டில் பட்டியலிடப்பட்ட வருமானத்தில் சேகரிக்கப்பட்ட வருமானம் | மொத்தமாக அறவிடப்பட வேண்டிய அளவு |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீத வரியும் வரியும் | 40,513,360 | 33,400,039 | 9,799,907 | 16,047,600 | 48,065,892 |
| அனுமதிப்பத்திரக் கட்டணம் | - | 618,483 | - | 618,483 | - |
| வுாடகை (கடை மற்றும் வீடு) | 8,893,496 | 9,700,177 | 1,664,358 | 6,298,476 | 10,630,839 |
| ஏனைய கட்டணம் | 1,361,268 | 555,281 | 950,432 | 234,932 | 731,185 |
| **மொத்தம்** | | | | | 59,427,916 |

மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் ரூபா 59,427,916 தொகையான மொத்த வருமான மீதி நிலுவையாகக் காணப்பட்டது.

**2.3.2 வீத வரி**

--------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் ரூபா 40,513,360 தொகையான ஓர் நிலுவை நிலவியதுடன் ஆண்டின் போதான அறவீடுகள் 24 சதவீதமாகக் காணப்பட்டன. ஆண்டின் போதான பட்டியல்படுத்தல்களில் இருந்தான அளவீடுகள் 48மு ஆகக் காணப்பட்டதுடன் திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலான மொத்த வீதவரி நிலுவை ரூபா 48 மில்லியனாகக் காணப்பட்டது.

(ஆ) சபையின் 4 வருமானப் பரிசோதகர்கள், ஆதனத் தடை உத்தியோகத்தர்கள் மூவரும் தரகு அடிப்படையில் வருமானம் அறவிடப்படும் ஊழியரும் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்த போதிலும் ஆண்டின் இறுதியில் ரூபா 48 மில்லியன் தொகையான நிலுவை காணப்பட்டது.

(இ) ரூபா 48 மில்லியன் தொகையான வீத வரி நிலுவை பல வருட காலமாக முன்கொண்டு செல்லப்பட்டு வந்த போதிலும் நகர சபைக் கட்டளைச் சட்டத்தின் 170 ஆம் பிரிவின் படி எவ்வித ஆதனமும் தடை செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 05 வருடங்களுக்கு ஒரு முறை ஆதனம் மதிப்பீடு செய்யப்பட வேண்டிய போதிலும் 2008 ஆம் ஆண்டின் போது மதிப்பீட்டின் அடிப்படையில் 2015 ஆம் ஆண்டின் போதும் வீதவரி அறவிடப்பட்டிருந்தது. 2008 ஆம் ஆண்டு முதல் இது வரை அதிகாரப்பிரதேசம் பாரியளவில் அபிவிருத்தியடைந்திருந்த போதிலும் ஆதனங்கள் மதிப்பிடப்பட்டு வீதவரி புதுப்பிக்கப்பட்டிராமையால் சபைக்குப் பாரிய வருமானம் கிடைக்கப்பெறாது போயிற்று.

**2.3.3 குத்தகை வாடகை**

---------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சபைக்குரிய காணியில் நிர்மாணிக்கப்பட்ட நீதிமன்றக் கட்டிடம் 10 வருடங்களுக்கு குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் இதற்காக பிரதான அமைச்சரின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. அக் கட்டிடத்தில் இருந்து 2005 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய வாடகை ரூபா 43,000 ஆகக் காணப்பட்டது. இவ் அறை வாடகைக் கொடுப்பனவு தாமதமாக்குதல் அல்லது செலுத்தப்படாதுள்ள சந்தர்ப்பங்களில் இது தொடர்பாக செயற்பட வேண்டிய முறை உடன்படிக்கைகளில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பொதுச் சந்தையின் இரண்டு மாட்டு இறைச்சிக் கடைகளும் கஹட்டபிட்டிய மாட்டு இறைச்சிக் கடையும் குத்தகை உடன்படிக்கையின் படி மாதாந்தம் குத்தகைத் தொகைக் கொடுப்பனவு தாமதமாயின் 1 சதவீத தண்டப்பணம் அறவிடப்பட வேண்டிய போதிலும் 2015 திசெம்பர் 31 ஆம் திகதி நிலவிய நிலுவைத் தொகைக்காக தண்டப்பணம் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(இ) பொதுச் சந்தையின் இரண்டு ஆட்டு இறைச்சிக் கடைகள் கேள்வியின் மூலம் குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 451,573 தொகையான நிலுவை காணப்பட்டது. இது தொடர்பாக உடன்படிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) பொதுச் சந்தையின் இரண்டு கோழி இறைச்சிக் கடைகள் கேள்வியின் மூலம் குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் குத்தகையாளர்களுடன் ஓர் உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்டிருக்கவில்லை. திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 1,085,102 தொகையான நிலுவைத் தொகை நிலவியது.

### 2.3.4 காணி வரி

10 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக காணி மதிப்பிடப்பட்டிராமையால் பெரும்பாலான இடங்களில் மிகவும் குறைவான வரித் தொகையே அறவிடப்பட்டிருந்தது.

### 2.3.5 வியாபார வரி

நகர சபை அதிகார எல்லைக்குட்பட்ட பகுதியில் செயற்படும் வியாபார நிறுவகங்களிடம் இருந்து வருடத்திற்கு உரித்தான வியாபார வரி ரூபா 174,164 தொகை 2016 மார்ச் 25 ஆம் திகதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

### 2.3.6 பிரசார விளம்பரப் பதாதைக் கட்டணம்

பிரசார விளம்பரப் பதாதை தொடர்பாக முறையான மெய்மையாய்வு ஒன்று மேற்கொள்ளப்பட்டிராததுடன் இது தொடர்பாக ஓர் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை.

### 2.3.7 சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம்

1988 இன் 56 ஆம் அலக்க மற்றும் 2000 இன் 53 ஆம் இலக்க அதிகாரச்சட்டங்களின் மூலம் திருத்தப்பட்ட 1980 ஆம் இலக்க 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் அதிகாரச்சட்டம் மற்றும் இதன் கீழ் அமுலாக்கப்பட்ட பிரமாணங்களின் படி, 2008 சனவரி 25 ஆம் திகதிய 1533/16 ஆம் இலக்க சுற்றாடல் மற்றும் இயற்கை வளங்கள் அமைச்சினால் விநியோகிக்கப்பட்ட அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் படி, விநியோகிக்கப்பட்ட சுற்றாடல் அனுமதிப்பத்திரம் 03 வருடங்களுக்குப் பின்னர் மீள புதுப்பிக்கப்பட வேண்டிய போதிலும் பின்தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டு 30 வியாபாரங்களுக்கான அனுமதிப்பத்திரம் விநியோகிக்கப்பட்டிராமையால் ரூபா 134,400 தொகையான வருமானம் சபைக்குக் கிடைக்கத் தவறியிருந்தது.

### 2.3.8 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் இருந்தும் ஏனைய அதிகாரிகளிடம் இருந்தும் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நீதிமன்றத் தண்டப்பணமாக ரூபா

608,580 தொகையும் முத்திரைக் கட்டணமாக ரூபா 20,000,000 தொகையும் பெறவேண்டியதாகக் காணப்பட்டது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ திறமையீனங்கள்

சபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணிக்கு மேலதிகமாக 35 பேர் சேவையில் நிரந்தரமாக்கப்பட்டிருக்கையில் 12 அமைய ஊழியர்களும் சேவையில் ஈடுபடுத்தப்பட்டு 2015 சனவரி முதல் திசெம்பர் வரை சம்பளமாக ரூபா 3,937,484 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

### 3.2 திண்மக் கழிவு முகாமைத்துவம்

சபையின் அதிகார எல்லைக்குட்பட்ட பகுதியில் நாளாந்தம் 20 தொன்னிற்குக் கிட்டிய அளவு குப்பைகள் சேகரிக்கப்படுவதுடன் அக் கழிவு முகாமைத்துவத்திற்காக முறையான நடைமுறைகள் வழங்கப்பட்டிருக்கவில்லை. சேகரிக்கப்படும் குப்பைகள் அம்புலுவாவ உயிரியல் வேறுபாட்டு கட்டிடத்தொகுதிக்கு அகற்றப்படுவதற்கும் அவ்வப்போது மண் இடப்பட்டு மூடப்படுகின்றது. இது தொடர்பாக மாவனல்ல நீதவான் நீதிமன்றத்தில் வழக்கும் விசாரணைக்குட்பட்டு வருவதுடன் அவ்வப்போது மக்களின் எதிர்ப்பு நிலவியமை அவதானிக்கப்பட்டது.

## 4. நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

### 4.1 கொள்வனவுத் திட்டம்

மீளாய்வாண்டிற்காக சபை கொள்வனவுத் திட்டம் ஒன்றைத் தயாரித்திருக்கவில்லை.

### 4.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டிற்காகத் தயாரிக்கப்பட்டிருந்த பாதீட்டின் படி, மதிப்பிடப்பட்ட வருமானம் மற்றும் செலவினம், உள்ளபடியான வருமானம் மற்றும் செலவினத்துடன் ஒப்பிடப்படுகையில் 04 வருமான விடயங்களில் 21 சதவீதம் முதல் 276 சதவீதம் வரையும் 07 செலவின விடயங்களில் 46 சதவீதம் முதல் 82 சதவீதம் வரையும் முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டு சாதனமாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. 2014 ஆம் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட பாதீட்டையும் செலவினப் பதிவேட்டையும் பரீட்சிக்கையில் பல செலவினத் தலைப்புகளில் மிகை ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது. ஆகையால் ஆண்டிற்கான செலவினம், மதிப்பிடப்பட்ட தொகையில் 50 சதவீதத்தைப் பார்க்கிலும் குறைவாகக் காணப்பட்டது.

### 4.3 உள்ளகக் கணக்காய்வு

இலங்கைக் குடியரசின் நிதிப் பிரமாணம் 133 மற்றும் 2009 யூன் 09 ஆம் திகதிய டீகம்ஏ/2009/01 ஆம் இலக்க முகாமைத்துவக் கணக்காய்வுத் திணைக்களச் சுற்றறிக்கையின் படி, நிறுவகத்தில் போதிய உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 4.4 சொத்து முகாமைத்துவம்

### விளைவற்றதும் குறைவான பயன்பாடுடையதுமான சொத்துக்கள்

மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 630,220 தொகைப் பெறுமதியான 03 சொத்து விடயங்கள் 3-6 ஆண்டு காலமாக விளைவற்றும் குறைவான பயன்பாட்டுடனும் காணப்பட்டன.

## 5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு
(இ) வருமான நிருவாகம்
(ஈ) சொத்து முகாமைத்துவம்